## In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 136/2006** **Date:18.06.2026.**

**(DW1)-** ஜெயசீலன்

**வாதி** தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. வா.சா.1 ஆவணம் எழுதுவதற்கான தாய பத்திரங்கள் எனது கைவசம் ஒப்படைக்கபட்டிருந்ததா என்றால் இல்லை.ஆனால் எங்களுக்கு எழுதிய ஆவணத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள். ரத்து பத்திரம் வா.சா.ஆ.3 எழுதும் சமயத்தில் தாய பத்திரம் எனது தந்தையிடம் இல்லை என்றால் அது பற்றி என்னால் சொல்லமுடியாது. வா.சா.1 ஆவணம் எழுதும் சமயத்தில் பட்டிகை சொத்தின் கைவசம் அனுபவத்தை ஒப்படைக்கும் வகைக்கு அதன் தாய பத்திரத்தையும் வாதியிடம் ஒப்படைத்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது ஆனால் எனது அப்பா வாதி அனைத்து ஆவணங்களையும் பலவந்தமாக எடுத்துகொண்டதாக குறிப்பிட்டார்.

2. அவ்வாறு ஆவணங்களை வாதி எடுத்திருந்தால் அதை பொறுத்து எனது அப்பா வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிட்டிருப்பார் என்றால் அது பற்றி தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் வாதி எனது அப்பா மீது அன்பு செலுத்தவில்லை என்றும் அவருக்கு மருத்துவ உதவி செய்யவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி காரணத்தினை எனது அப்பா எங்கள் பெயரில் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்திலோ எதிருரையிலோ குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். எனது அப்பா ரத்து பத்திரம் எழுதும் போது தொலை தூரம் பயணம் செய்யும் அளவிற்கு உடல் நலத்துடன் இல்லை என்றால் சரியல்ல.

3. வாதி வா.சா.ஆ 3 ஆவணம் எழுதிய முன்பும் பின்பும் எனது அப்பாவை நல்ல முறையில் கவனித்து மருத்துவ உதவி செய்து வந்தார் என்றால் சரியல்ல.வாதியின் பெயரில் வா.சா.1 ஆவணம் எழுதுவதற்கு முன்பும் பின்பும் வாதியின் அப்பாவை வாதி நல்ல முறையில் கவனித்து வந்தார் என்றால் சரியல்ல. வா.சா.3 ரத்து ஆவணத்தில் நான் 1வது சாட்சி என்றால் சரிதான். எனது அப்பா சுயபுத்தியில் இல்லாததை பயன்படுத்தி கொண்டு அவரை நானும் மற்ற பிரதிவாதிகளும் சார்பதிவாளர் அலுவலகத்துக்கு அழைத்து சென்று வா.சா.ஆ.3 ஆவணத்தை ஏற்படுத்தியும் பிரதிவாதிகளாகிய எங்கள் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி உள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் பெயருக்கும் ஒரு பத்திரம் ஏற்படுத்தப்பட்டு

உள்ளது. வாதியின் பெயருக்கு ஏற்படுத்தப்பட்ட ஆவணத்தை வாதி ஏற்றுகொள்ளவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் பட்டாவோ தீர்வை ரசீதோ எதுவும் செலுத்தவில்லை என்றாலும் கைவசம் அனுபவம் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

4. வாதி எனது அப்பாவை கவனிக்கவில்லை என்றும் எனது அப்பாவை நாங்கள் தான் கவனித்தோம் என்று காட்டுவதற்கு நான் நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.தேவைப்பட்டால் தாக்கல் செய்யலாம். நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசுதுகள் அனைத்தும் 2012ம் வருடத்திற்கு பின்பு தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் எனது பெயரில் உள்ள பட்டாவும் 2012ம் வருடத்திற்ல் எடுக்கப்பட்டது என்றால் சரிதான், 2012 வரை எனது அப்பா பெயரில் இருந்தது. அதன் பின் எனது அப்பா எங்களுக்கு எழுதி கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் பெயர் மாற்றம் நான் செய்தேன். மற்றொரு சகோதரர் 2006ம் வருடமே மாற்றம் செய்துவிட்டார். நான் குறிப்பிடுவது போன்று எந்த மாற்றமும் 2006ல் ஏற்படுத்தவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

5. நான் 2020- ம் வருடத்திற்கு பின் கொரனோ காலத்தினை பயன்படுத்தி தாவா சொத்தில் நானும் எனது சகோதரரான பிரதிவாதிகளும் அத்துமீறி நுழைந்து கட்டுமானம் ஏற்படுத்தி விட்டோம் என்று சொன்னால் சரியல்ல.2013ம் வருடமே நான் கடன் பெற்று அந்த வருடமே வீடு கட்டி குடி ஏறிவிட்டேன். 05.10.2006 ம் தேதியிட்டு இந்நீதிமன்றம் இவ்வழக்கில் பட்டிகை சொத்திற்குள் நுழைந்து கட்டுமானங்களில் எந்த மாற்றமும் செய்யகூடாது என்று இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தது என்றால் சரிதான். பட்டிகை சொத்தினைஅடிப்படையாக கொண்டு அ.வ.எண்.12/2004 என்ற வழக்கை பத்பனாபபுரம் சார்பு நீதிமன்றத்தில் வாதியால் தாக்கல் செய்யப்பட்டு அதில் இடைக்கால மனு எண். 20/2004 என்ற மனுவில் ஒரு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. வா.சா.ஆ.3 ஆவணத்தில் எனது அப்பாவை வாதி ஏமாற்றி வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதி வாங்கியதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் பதிவு செய்வதற்கு முன்பு நான் எனது அப்பாவை எனது பெரியப்பா மகன் ஜஸ்டின் விமல் குமார் வழி அவரது வீட்டிற்கு அழைத்து செல்வது போல் அழைத்து சென்று என்னுடன் சாட்சி கையெழுத்து செய்த நபர் மூலம் நாகர்கோவிலில் இருந்து எனது அப்பாவை ஏமாற்றி மற்றும் பயமுறுத்தி வா.சா.ஆ.3

ரத்து ஆவணம் எழுதப்பட்டது என்றாலும் அதன் அடிப்படையில் நாங்கள் எழுதி பெற்ற வா.சா.ஆ. 4 முதல் 6 ஆவணங்கள் நிலைக்கதக்கதல்ல என்றாலும் அது ரத்து செய்யத்தக்கது என்று சொன்னாலும் சரியல்ல. வாதியின் பட்டிகை சொத்தில் நான் நுழையாத படி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது திருமண அழைப்பதிழ் என்றால் சரிதான்.மேற்படி ஆவணம் வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.மேற்படி அழைப்பிதழின் உறையில் உள்ள கையெழுத்து என்னுடைய அப்பாவின் கையெழுத்து என்றால் அது பற்றி என்னால் சரியாக சொல்லமுடியவில்லை. அதில் என்னுடைய அப்பா திருமணத்திற்காக அழைப்பு விடுத்ததாக இல்லை என்றால் சரியல்ல. அது நான் எனது நண்பர்களுக்காக தனியாக அடித்த அழைப்பிதழ் ஆகும்.

7.எனது தாயின் 65 செண்ட் நிலத்தினை நானும் மற்ற பிரதிவாதிகளும் ஏமாற்றி வாங்கிவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**